**N THE COURT OF THE PRINCIPAL SUBORDINATE JUDGES COURT HOSUR.**

**MCOP No. 243/2019**

Deposition of Pw1 witness for the petitioners

Solemnly affirmed and sworn by Tmt.V. Parvathi, Bench Clerk, on 21**.12.2021** in accordance with the provisions of the Act of 1988.

Name: Arumugam Father Name: Raji

Age: 40

Address: D.No. 2/151, Melpalayam Village , Thiyagarasanapalli Post, Shoolagiri Taluk, Krishnagiri District.

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரவேன். முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லி தயாரிக்கப்பட்டு உண்மை என்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்துள்ளேன். அதனை எனது முதன்மை சாட்சியமாக பதிவு செய்யும் படி கேட்டுக்கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 1 | Ex P1 | FIR dated 01.10.2017 |
| 2 | Ex P2 | Wound certificate of the petitioner issued by Govt Hospital, Krishnagiri dated 20.09.2017 |
| 3 | Ex P3 | Scan report of the petitioner dated 10.10.2017 |
| 4 | Ex P4 | MRI report of the petitioner dated 05.10.2017 |
| 5 | Ex P5 | Copy of the Insurance Policy of First respondent vehicle dated 28.03.2017 |
| 6 | Ex P6 | Copy of Registration certificate of the first respondent vehicle |
| 7 | Ex P7 | Copy of the Driving license of the petitioner |
| 8 | Ex P8 | Xerox copy of the Aadhar card of the petitioner compared with original and returned the same to the witness |
| 9 | Ex P9 | Xerox copy of the Bank Pass Book of the petitioner compared with original and returned the same to the witness |
| 10 | Ex P10 | Xerox copy of the Pan card of the petitioner compared with original and returned the same to the witness |

மனுப்படி உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

விபத்து எந்த தேதியில் நடந்தது என்றால் 2017 ல் நடந்தது தேதி ஞாபகம் இல்லை. TN 70H 4152 என்ற இருசக்கர வாகனத்தை விபத்து சமயத்தில் நான் ஓட்டி சென்றேன் என்றால்சரிதான். அந்த

வாகனத்தில் வேறு யார் பயணம் செய்தார்கள் என்றால் வெங்கடசாமி, ராமசாமியும் பயணம் செய்தார்கள். 3 பேர் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்வது தவறு என்று சொன்னால் ச ரிதான். புகாரை நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான் மருத்துவமனையில் வந்து வாங்கிகொண்டார்கள். முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் என்னுடைய இருசக்கர வாகனத்தில் 3 நபர்களை ஏற்றி சென்று யூடேன் செய்வதற்காக முதல் எதிர்மனுதாரர் வாகனத்தை முந்தி செல்லும்போது Balance தவறி வண்டியிலிருந்து நாங்கள் கீழே விழுந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் பாதுகாப்பாக வண்டியை ஓட்டி சென்றிருந்தார் இந்த விபத்து நடந்திருக்காது என்று சொன்னால்சரியல்ல. ஓசூரிலிருந்து கிருஷ்ணகிரி செல்லும் National Highway ல் செல்லும்போது பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் நான் என் வாகனத்தை திருப்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடககும் போது நான் தலைக்கவசம் அணிந்திருந்தேனா என்றால் இல்லை. விபத்து ஏற்பட்டவுடன் நான் எந்த மருத்துவமனைக்கு செனறு சிகிச்சை பெற்றேன் என்றால் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் . எனக்கு விபத்தில் எங்கெங்கு காயம் ஏற்பட்டது என்றால் இடுப்பு, வலது கால், வலது தொடை, வலது கணுக்கால் காயம் ஏற்பட்டது கைவிரல்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள மா.சா ஆ 2 காய சான்றிதழக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அறுவை சிகிச்சை செய்தார்களா என்றால் இல்லை. எனக்கு எந்த எலும்பு முறிவும ஏற்படவில்லை என்று மா.சா ஆ 3 ஆவணத்தின் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு Small chip பிராக்சர் மட்டும் தான் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கு உண்மையாக பிராக்சர் ஏற்பட்டிருந்தால் அதற்கான CT Scan யை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு தாக்கல் செய்யாமல் மா.சா ஆ 3 ஆவணத்தை மட்டும் போலியாக உருவாக்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவபில்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய வாகனம் ICICI Lambord காப்பீடு செய்யப்பட்டதாக கூறியிருப்பது என்றால் சரிதான். அந்த ஆய்வறிக்கை Ex R1. அதே போல் முதல் எதிர்மனுதாரர் வாகனத்தையும் ஆய்வு செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு செய்து ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆய்வறிக்கை Ex R2. என்னுடைய வாகனத்தின் காப்பீட்டாளர்களிடமிருந்து நான் இழப்பீடு எதுவும் கோரவில்லையா என்றால் ஆமாம். இந்த வழக்கில் என்னுடைய காப்பீட்டாளரை ஒரு தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய வாகனத்தில் பின்னால் அமர்ந்து சசென்ற நபரும் இழப்பீடு கோரி கிருஷ்ணகிரி சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் என்ன வேலை பார்த்து கொண்டிருந்தேன் என்றால் கட்டிட மேஸ்திரியாக பணிபுரிந்தேன். நான் தற்போதும் மேஸ்திரி வேலை செய்து வருகிறேனா என்றால் இல்லை, முன்பை போல் என்னால் வேலை செய்ய இயலவில்லை. எனக்கும் எந்த நிரந்தரஊனமும் செயல்திறன் பாதிப்பும் ஏற்டபவில்லை என்றால் சரியல்ல . என்னுடைய வருமானத்திறகு ஆதரமாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இரண்டாம் எதிர்மனுதாரருக்கு எதிராக இழப்பீடு கோர முடியாது என்றாலும்என்னுடைய வண்டியின்

காப்பீட்டாளரிடம் தான் இழப்பீடு கோரவேண்டும் என்றால் சரியல்ல. நான் கோருகின்ற இழப்பீடு தொகை மிக அதிகம் என்று சொன்னால் சரியல்ல. இறுதி உத்தரவு பிறப்பிக்கும்போது அஜாக்கிரதையும் கணக்கில் கொண்டு தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.